**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 34 of 2023 C/W OS.No. 101/2019

Deposition of DW.3

Name of the Witness: திருமதி.பழனியம்மாள்

Date : 17.07.2026

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)**

நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததது என்றால் அழைப்பாணையின் பெயரில் தான் ஆஜராகியுள்ளேன். நான் கூறுவது பொய் என்றும் சாராதா அழைத்ததால் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நானும், சாராதாவும் போயர் சமூகத்தை சார்ந்தவர்கள் ஆவோம். நான் பஞ்சாயத்து அலுவலகத்தில் துப்புறவு பணியாளராக எப்போது இருந்து பணிபுரிகிறேன் என்றால் கடந்த 10 ஆண்டு காலமாக பணிபுரிந்து வருகிறேன். நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் கல்லியூரில் என்றால் நான் அரூரில் பிறந்தேன். என்னையை திருமணம் செய்துக்கொணடுத்தது கல்லியூர் ஆகும். மருக்காலம்பட்டியை சார்ந்த காந்தி வன்னியர் சமூகத்தை சார்ந்தவர் ஆவார். அவரது மனைவி சுமதி மற்றும் அவரது மக்கள், கவிப்பிரியா, ஜீவஜோதி மற்றும் மதன் ராஜ் ஆகியோர்கள் என்றால் எனக்கு தெரியாது. காந்தியின் தாயார் மல்லிகாவும் எனக்கு தெரியாது. காந்தி என்ன வேலையில் இருந்தார் என்றால் கோபாலபுரம் சக்கர மில்லில் பணியாற்றினார். அவர் எப்போது இறந்தார் என்றால் தேதி ஞாபகம் இல்லை. அவர் இறப்பிற்கு நானும் சென்றேன். அவரது ஈம சடங்கத்தில் கோபாலபுரம் சக்கர ஆலையில் இருந்து ஈம கிரியை

தொகையை அவரது மனைவி சுமதியிடம் கொடுத்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சாராதாவுக்கும் காந்திக்கும் அடிக்கடி சண்டை வரும், அது சம்மந்தமாக போலீசில் புகார் கொடுத்துள்ளார். புகாரில் சாரதா, தான் காந்தியின் இரண்டாவது மனைவி என்றும் அவர் தன்னை அடித்தாக கூறி கொடுத்துள்ளார் என்றால் தன்னை முதல் மனைவி என்று தான் கூறியுள்ளார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் எந்த வருடத்தில் டெல்லியில் ஓட்டல் கடை வைத்து இருந்தேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் டெல்லியில் ஓட்டல் கடை நடத்தவில்லை என்றும், காந்தி என்னுடன் டெல்லிக்கு என்னுடன் வரவில்லை என்றால் சரியல்ல. நான் வீட்டில் சமைத்து வெளியில் விற்றேன். காந்திக்கும் சாராதாவுக்கும் எந்த தேதியில் திருமணம் நடைப்பெற்றது என்றால் திருமணம் நடைப்பெற்றது. ஆனால் தேதி ஞாபகம் இல்லை. காந்தியும் சாராதாவும் கனவன் மனைவியாக வாழ்ந்து வந்தார்கள் என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாரதா என் உறவுக்காரர் என்பதால், சாரதா எழுதிக்கொடுத்த பிரமாண வாக்குமூலத்தில் கையெழுத்து இட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காந்திக்கு சுமதிதான் சட்டப்படி மனைவி என்றும், சாரதா காந்தியின் மனைவி அல்ல என்றும், இவையெல்லாம் தெரிந்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.